# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 76 — 1973 සැප්තැම්බර් 07 වැනි සිකුරාදා — 1973.09.07

76 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 917 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அநறிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 921 | ஏலவிற்பனைகள் .. .. .. | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### தபாற் தந்திப் பகுதி

முறுக்கு நூற்பந்து விநியோகம் செய்வதற்கு

முறுக்கு நூற்பந்து விநியோகம் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 1, அஞ்சல் தந்திப் போக்குவரத்து தலைமை அலுவலகக் கட்டிடத் திணைக்களக் கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் 1973 செப்தம்பர் 24 ம் திகதி மு. ப. 10.00 மணி வரை உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப் படும்.

2. 1973 செப்தம்பர் 24 ம் திகதி மு. ப. 10.00 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரர்கள் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் பொழுது சமுகமளிக்க அனுமதிக்கப் படுவர்.

3. கொழும்பு 5, நாராஹேன்பிட்டியிலுள்ள உதவி அத்தியட்சகர் (கட்டிடம், உபகரணம், நலன்புரி, களஞ்சியம்) காரியாலயத்திலிருந்து பெற்ற பத்திரங்களில் அனுப்பப்படல் வேண்டும்.

4 கொழும்பு 1, பி. த. க. வில் இலக்கம் 4, விசாரணை செய்யும் கரும பீடத்தில் கேள்விப் பத்திர பொறுப்புப் பணமாக ரூபா 50 கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டைச் சமர்ப்பிக்கும் கேள்விப் பத்திர விண்ணப்பதாரர்களுக்கு கேள்விப்பத்திர சாதனங்கள் 1973 செப்தம்பர் 7 ம் திகதியிலிருந்து செப்தம்பர் 21 ம் திகதி வரை அலுவலக நேரங்களில் வழங்கப்படும்.

5. கொழும்பு 5, நாராஹேன்பிட்டியிலுள்ள உதவி அத்தியட்சகர் (கட்டடம், உபகரணம், நலன்புரி, களஞ்சியம்) காரியாலயத்திலிருந்து மேலதிக விபரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. ஆர். எம். ஜயவர்தன,
அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப் போக்குவரத்து அதிபரும்.

தபால் தந்தித் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1.

9-67/1—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76.

---

### அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் திணைக்களம்

இரும்புக் காப்புப் பெட்டிகள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்

கொழும்பு 5, அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் திணைக்களம், உபகரணம், கட்டிடங்கள், நலன்புரி, களஞ்சிய உதவி அத்தியட்சகரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடியதாகவுள்ள வரையப்பட்டுள்ள விவரக்கூற்றுக்கு ஏற்ப இரும்புக்காப்புப் பெட்டிகள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்களை உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் இருந்து கொழும்பு 1, அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் தலைமை அலுவலகக் கட்டிடத்திலுள்ள திணைக்களக் கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் 1973 செப்தம்பர் 24 திகதி மு. ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. 1973 செப்தம்பர் 24 ம் திகதி மு. ப. 10.00 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரகாரர்கள் விரும்பின் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் பிரசன்னமாயிருக்கலாம்.

3. கொழும்பு 5, நாராஹேன்பிட்டி, உபகரண, கட்டிட, நலன்புரி களஞ்சிய உப அத்தியட்சகரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் தயாரிக்கப் பட வேண்டும்.

4. கொழும்பு 1, பி. அ. அ. வந்து பெறும் அஞ்சல் வைப்புக் கரும பீடத்தில் (இல. 4) ரூபா 50 கேள்விப் பத்திர கட்டுப்பணமாகச் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்தால் 1973 செப்தம்பர் 7 ம் திகதியில் இருந்து 1973 செப்தம்பர் 21 ம் திகதி வரை அலுவலக நேரத்தில் கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப் படும்.

5. கொழும்பு 5, நாராஹேன்பிட்டி, உபகரண, கட்டிட, நலன்புரி, களஞ்சிய உதவி அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து மேலதிக விபரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. ஆர். எம். ஜயவர்தன,
அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப் போக்குவரத்து அதிபரும்.

தபால் தந்தித் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1.

9-67/2—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76.

---

### முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

## தபாற் தந்திப் பகுதி

### பீக் தொப்பி விநியோகிப்பதற்கான கேள்விப் பத்திரங்கள்

நாராஹேன்பிட்ட, உதவி அத்தியட்சகர் (உபகரணம், கட்டடம், நலன்புரி, களஞ்சியம்) அலுவலகத்திலுள்ள மாதிரி பீக் தொப்பியைப் போல் பீக் தொப்பிகள் விநியோகிப்பதற்கு கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 1, அஞ்சல் தந்திப் போக்குவரத்து தலைமை அலுவலகக் கட்டிடத்திலுள்ள திணைக்களக் கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் 1973 செப்தம்பர் 24 ம் திகதி மு. ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள், 1973 செப்தம்பர் 24 ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விப் பத்திரதாரர் சமூகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

3. கொழும்பு,நாராஹேன்பிட்டியிலுள்ள தபால் தந்திப் போக்குவரத்து பகுதியின் உபகரணம், கட்டடம், நலன்புரி, களஞ்சியம் ஆகியவை சம்பந்தமான உதவி அத்தியட்சகர் அலுவலகத்திலிருந்து விநியோகிக்கப்படும் கேள்விப் பத்திர சாதனங்களிலேயே கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும். மேலதிக விபரங்களும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கொழும்பு, பிரதம அஞ்சல் அலுவலகத்தில் 4 ம் இலக்க கரும பீடத்தில் கேள்விப்பத்திர பொறுப்புப் பணமாக ரூபா 50 கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பவர்களுக்கே கேள்விப் பத்திர சாதனங்கள் விநியோகிக்கப்படும். கேள்விப் பத்திர சாதனங்கள் 1973 செப்தம்பர் 7 ம் திகதி தொடக்கம் 1973 செப்தம்பர் 21 ம் திகதி வரை பி. ப. 3.30 மணி வரை விநியோகிக்கப்படும்.

ஏ. ஆர். எம் ஜயவர்தன,
அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப் போக்குவரத்து அதிபரும்.

தபால் தந்தித் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1.

9-67/3—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76.

---

## அஞ்சல் தொலைத் தொடர்புத் திணைக்களம்

பின்வரும் இனங்களைச் சார்ந்த வடம் அல்லது வடமற்ற சி. பி. ஆளிப்பலகைகளை வழங்குவதற்கும் விநியோகிப்பதற்குமான கேள்விப் பத்திரங்கள், கொழும்பு 1, லோட்டஸ் வீதி, அஞ்சல் தொலைத் தொடர்புத் தலைமையகம், 6 வது மாடி, நிர்வாகப் பிரிவு, அஞ்சல் தொலைத் தொடர்புத் திணைக்கள கேள்விச் சபைத் தலைவரால், 1973 ஒக்டோபர் 5 ஆம் திகதி மு. ப. 10.00 மணி வரை, ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) 5 இல. ஒரு மாற்றுக் கம்பியும் மூன்று தொடர் கம்பிகளும்.

(ஆ) 5 இல. இரு மாற்றுக் கம்பிகளும் நான்கு தொடர் கம்பிகளும்.

(இ) 20 இல. மூன்று மாற்றுக் கம்பிகளும் ஒன்பது தொடர் கம்பிகளும்.

(ஈ) 30 இல. ஐந்து மாற்றுக் கம்பிகளும் இருபது தொடர் கம்பிகளும்.

(உ) 20 இல. பத்து மாற்றுக் கம்பிகளும் நாற்பது/ஐம்பது/அறுபது தொடர் கம்பிகளும்.

கொழும்பு 1, லோட்டஸ் வீதி, அஞ்சல் தொலைத் தொடர்புத் தலைமையகம் 5 வது மாடியிலுள்ள பிரதான தொலைத் தொடர்பு எந்திரியின் அலுவலகத்திலால் வழங்கப்படும் படிவத்தில் இரட்டைப் பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்விடயம் தொடர்பான சகல தகவல்களையும் இவரிடம் அறிந்து கொள்வதுடன் இவரது அலுவலகத்தில் கேள்விச் சாதனங்களையும் சோதித்துக் கொள்ளலாம்.

பி. தொ. எந்திரியின் அலுவலகத்தில் விண்ணப்பிக்க விரும்பும் கேள்வியாளர்கள், கொழும்பு 1, கோட்டை மத்திய தந்தி அலுவலகத்திலுள்ள தந்திக் காசாளரிடம் அல்லது அஞ்சல் அலுவலகமொன்றிற்குப் பொறுப்பாயுள்ள அஞ்சலதிபரிடம் கேள்வி வைப்புப் பணமாக 250/- ரூபாவைச் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை அளித்ததும் அவர்களுக்கு 1973 ஒக்டோபர் 2 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை கேள்விச் சாதனங்கள் வழங்கப்படும்.

ஏ. ஆர். எம். ஜயவர்த்தன,
அஞ்சல் அதிபதியும் தொலைத் தொடர்புப் பணிப்பாளரும்.

நிருவாகப் பிரிவு,
6 வது மாடி,
அ.தொ. தலைமையகம்,
லோட்டஸ் வீதி,
கோட்டை, கொழும்பு 1,
16 யூன், 1973.

9-63—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76.

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு 5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் 1973 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ஆம் தேதி மு.ப. 10.00 மணிவரை, 1974 ஆம் ஆண்டுத் தேவைகட்கான அச்சிட்ட படிவங்களையும் பதிவேடுகளையும் அச்சிட்டு வழங்குவதற்காகப் பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

1973 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9 ஆம் தேதி நண்பகல் 12.00 மணிவரை பொரலஸ்கமுவை, வெரகெரை இலங்கைப் போக்குவரத்துச் சபை பிரதம விநியோக உத்தியோகத்தரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடியதான பத்திரங்களில் கேள்விப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு இரட்டைப் பிரதிகளில் அனுப்பப்பட வேண்டும். மீளளிக்கப்படக்கூடிய கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 100/- ஐயும் மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் ரூபா 10/- ஐயும் பொரலஸ்கமுவை, வெரகெரையிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதிப் பிரதம கணக்காள உத்தியோகத்தரின் அலுவலகத்தில் காசாகக் கட்டி இதற்கான பற்றுச்சீட்டை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுவதற்கு முன் காட்டவேண்டும்.

மேலதிக விவரங்களை எனது அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பிரதம விநியோக உத்தியோகத்தர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

விநியோகப் பகுதி,
வெரகெரை,
பொரலஸ்கமுவை,
22 ஆகஸ்ட் 1973.

9- 5—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76.

---

## காணி ஆணையாளர் திணைக்களம்

பின்வரும் வேலைகளைச் செய்வதற்கான கேள்விப்பத்திரங்களைத் த. பெ. எண் 500, கொழும்பு என்னும் முகவரியிலுள்ள காணி ஆணையாளர் திணைக்களத்தைச் சேர்ந்த கேள்விப்பத்திர சபைத் தலைவர் அவர்கள் 1973 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ம் திகதி ந. ப. 12.00 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

| வேலையின் விபரம் | தேவைப்படும் பதிவுத் தொகை |
|---|---|
| 1. மகாவெவ குடியேற்றத்திட்ட வீதி அமைத்தல் கங்குரான்பெத்த பெரும்பாக உத்தியோகத்தர் பிரிவு. | 40,000 |
| 2. கம்புவெல டொடன்கொல்ல வீதி கங்குரான்கெத்த பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் பிரிவு. | 30,000 |

2. மேற் குறிப்பிட்ட தொகைக்கோ அல்லது அதிற் கூடிய தொகைக்கோ அரசினர் கட்டுவேலைப் பகுதி, நீர்ப்பாசனம் அல்லது கல்வி முதலிய திணைக்களங்களில் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கட்கும் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் கிராமமுன்னேற்றச் சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றுக்கும் இக்கேள்விக்கான வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் 1973 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24 ம் திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும்.

3. வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் முன் நுவரெலியாக் கச்சேரியில் ரூபா 50 கேள்விக்கட்டணமாகக் கட்டிய பற்றுச்சீட்டு கேள்விக்காரர்களால் அரசாங்க அதிபருக்கும் காண்பிக்கப்பட வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஆகியன இக் கேள்விக் கட்டணம் செலுத்தத் வேவையில்லை. காசோலை, காசுக்கட்டளை, தபாற் கட்டளை முதலியன ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

4. கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதிகளாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். கேள்விப் பத்திரத்தைக் கொண்டு உள்ள உறை முத்திரையிடப் பெற்று உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படவேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பப்படாவிட்டால் அவற்றை நேரடியாகக் கொழும்பிலுள்ள செயலகத்தில் 320 ம் இலக்க அறையினுள் வைத்திருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியிலும் போடலாம்.

5. கேள்விப் பத்திரங்கள் 1973 ம் ஆண்டு செப்டெம்பர் 26 ம் திகதி பி.ப. 2.30 மணிக்குக் கொழும்பிலுள்ள செயலகத்தில் 320 ம் இலக்க அறையில் வைத்துத் திறக்கப்படும்.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் இலங்கையரை வேலைக் கமர்த்த இணங்க வேண்டும். மேலும் அவர்கள் வேலை நடைபெறும் பிரதேசத்தை சேர்ந்தவர்களாகயுமிருக்க வேண்டும்.

7. மேற் கூறிய நிபந்தனைகட்கமையத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் நடக்கத் தவறினல் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும். ஆனுல் விசேடமான சூழ்நிலைகளில் இவ்விதியிலிருந்து, ஒப்பந்தம் எவ்வுத்தியோகத்தருடன் செய்யப்பட்டதோ அவ்வுத்தியோகத்தர் காணி, கமத்தொழில் அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியின் சம்மதத்துடன் இலங்கையரல்லாதாரை வேலைக்கமர்த்துவதற்கு எழுத்து மூலம் அனுமதி அளிக்கலாம்.

மேற் கூறிய அனுமதி எழுத்து மூலம் பெருமல் இலங்கையரல்லாதாரை வேலைக்கமர்த்துதல் தவிர்க்கப்பட்டுள்ளது. அது ஒப்பந்தத்தை மீறியதாகும்.

8. இவ்வொப்பந்தத்திற்கு "இலங்கையர்" என்பது வம்சாவழி அல்லது பதிவுப் பிரசைகளைக்குறிக்கும்.

9. ஒப்பந்தக்காரர் தற்போது அமுலிலிருக்கும் அல்லது எதிர் காலத்தில் அமுலுக்கு கொண்டுவரப்படும் தொழிலாளருக்கான சம்பள சட்டங்கட்கமையத் தன்னுல் ஒவ்வொரு துறையிலும் வேலைக் கமர்த்தப்படும் தொழிலாளருக்கு நியாயமான சம்பளம் வழங்க வேண்டும்.

10. ஒப்பந்தக்காரர் காணி ஆணையாளர் திணைக்களத்தின் அனுமதி பெற்ற எவ்வுத்தியோகத்தரையும் இவ்வேலையோடு தொடர்புடைய புத்தகங்கள் கணக்கீடுகள், வேலையாட்கள் வரவு அட்டை முதலியவற்றைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

11. வேறேதும் விபரங்கள் தேவைப்படின் நுவரெலியா அரசாங்க அதிபருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

12. தவறிழைக்கும் ஒப்பந்தகாரர் பட்டியலில் காணப்படும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

வை. பி. புஸ்ஸதெனிய,
நுவரெலியா மாவட்ட உதவி அரசாங்க அதிபர்.

கச்சேரி, நுவரெலியா,
1973 அகோஸ்து 27.

9–117—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

---

திட்ட அலுவலகம்—மன்னர் செயலகம்

மன்னர் செயலகத்தில் திட்ட அலுவலகம் அமைப்பதற்குரிய கேள்விப் பத்திரங்கள் மன்னர் அரசாங்க அதிபரினுல் 1973 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 21 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மன்னர் செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. மன்னர் கச்சேரியில் அரசாங்க அதிபரிடமிருந்து 1973 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 18 ம் திகதிவரை பெறக்கூடிய கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதிகளில் அனுப்புதல் வேண்டும். இதனைப் பற்றிய மேலதிக விபரங்களையும் தகவல்களையும் மன்னர் அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். ரூபா 50,000/- வரைக்கும் அரசாங்க திணைக்களங்களுடன் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்களும், அனுமதி பெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கேள்விப் பத்திரங்களை அனுப்பத் தகுதி வாய்ந்தவைகளாகும். கேள்விப் பத்திரங்கள் அனுப்புவோர் மன்னர் கச்சேரியில் ரூபா 25/- செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டினைக் காண்பித்துக் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை கட்டுப்பணம் செலுத்த வேண்டியதில்லை.

3. கேள்விப் பத்திரங்கள், மன்னர் கச்சேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்க்கலாம். அல்லது பதிவு செய்யப்பட்ட தபால் மூலம், "அரசாங்க அதிபர், மன்னர்" என்று விலாசமிட்டு, 1973 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 21 ம் திகதி (21.9.73) நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். தபால் மூலம் சேர்க்கப்படும் ஒவ்வொரு கேள்விப்பத்திர மேலுறையும் "திட்ட அமைச்சு அலுவலகம் கட்டுதல்" என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட காலவெல்லையின் பின்னர் கிடைக்கப்பெற்ற கேள்விப் பத்திரங்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டா.

4. இக்கேள்விப் பத்திரங்கள், மன்னர் கச்சேரியில் 1973 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 21 ம் திகதி (21.9.73) பிற்பகல் 12.30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்களை அனுப்பியோர் சமுகந்தரலாம்.

5. தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் ஒப்பந்தம் ஒன்றிற்கு இணையும்படி எழுத்துமூலம் அறிவிக்கப்படுவர். இவ்வறிவித்தலை ஏற்ற 10 நாட்களுக்குள்ளாக ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் கட்டுப்பணம் செலுத்திய ரூபா 25/- பறிமுதலாக்கப்படும். ஒப்பந்தம் கைச்சாத்திடும் நேரத்தில் கேட்கப்பட்ட தொகையில் இரண்டு சதவிகித தொகையை கட்டுப்பணமாகச் செலுத்த வேண்டும். இக்கட்டுப்பணம் மேற்காட்டப்பட்ட வேலை திருப்தியாக முடியும் வரை திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

6. செய்யப்பட்ட வேலைகளுக்கு 90 சதவிகித பணமே கொடுக்கப்படும். எஞ்சிய 10 விகிதப் பணமும் 5 ம் பந்தியிற் காட்டப்பட்ட கட்டுப்பணமும் முழு வேலைகளும் முடிந்த மூன்று மாத காலத்தின் பின்னரே கொடுக்கப்படும்.

மு. ஸ்ரீ. சண்முகராசா,
உதவி இயக்குநர்—திட்ட அமைச்சு,
மன்னர் மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

மன்னர் செயலகம்,
மன்னர்,
1973 ம் ஆண்டு ஆவணி மாதம் 20 ம் திகதி.

9–38—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

---

காணி ஆணையாளர் திணைக்களம்—அம்பாறைக் கச்சேரி

அம்பாறை மாவட்டத்தில் கீழே குறிப்பிடும் வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் 1973 ம், ஆண்டு புரட்டாதி மாதம் 14 ந் திகதி முற்பகல் 10.00 மணிவரை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலையின் பெயர் : | பதிவு செய்திருக்கவேண்டிய தொகை |
|---|---|
| திகாமதுலை கிராமச்சங்க எல்லையினுள் ருணை மடுவிலிருந்து 10 ம், கிராமத்திற்கு ஊடாக மத்திய முகாம்வரையுள்ள பாதையில் 13/23 ம், வீடுவரை செல்லும் பாதைப் பகுதி | 15,000.00 |

2. மேற் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கெதிரே குறிக்கப்பட்டுள்ள தொகைக்கு அல்லது அதற்கு மேற்பட்டுள்ள தொகைக்கு கொந்தராத்துக்காரர்களாக அரசாங்கத் திணைக்களங்களில் பதிவு செய்துள்ள கொந்தாராத்துக்காரர்களுக்கும், பதிவு செய்துள்ள சங்கங்களுக்கும் 1973 ம் ஆண்டு புரட்டதி மாதம் 13 ந் திகதி 02.00 மணிவரை அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரால் கேள்விப்பத்திரம் வழங்கப்படும். பதிவு செய்யப்பட்டதும் ஏனையவை பற்றி நிரூபிப்பதற்கான சாதனங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரம் விண்ணப்பக்காரர்களால் அம்பாறைக் கச்சேரியில் ஒவ்வொரு வேலைக்குமாக கேள்வி வைப்புப்பணம் ரூபா 50/- வீதம் கட்டி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன்பேரில் கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ள முடியும். காசோலை, காசுக்கட்டளை, தபாற்கட்டளை ஆகியவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அங்கீகரிக்கப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களும், பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களும் கேள்வி வைப்புப் பணம் செலுத்த வேண்டியதில்லை. ஆனாலும் மேற்குறிப்பிட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதென நிரூபித்த பின் அச்சங்கங்களுக்கு கேள்விப்பத்திரம் வழங்கப்படும்.

4. கேள்விப்பத்திரத்தைப் பூர்த்தி செய்து இணைப்பிரதியுடன் பதிவு செய்யப்பட்ட தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பிவைக்கப்படும் தபால் உறையில் " சீல் " வைக்க வேண்டும். தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் தபாலில் அனுப்பிவைக்கப்படாவிட்டால் அம்பாறைக் கச்சேரியில் காணிப் பகுதியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் போடப்பட வேண்டும்.

5. 1973 ம், ஆண்டு புரட்டாதி மாதம் 14 ந் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் அத்தினத்தில் கேள்விப்பத்திரக்காரர்களுக்கு அவசியமானால் சமூகமளிக்க முடியும்.

6. தங்களது கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென அறிவிக்கும் கடிதம் கிடைத்து 14 நாட்களுக்குள் உடன்படிக்கைப் பத்திரம் கைச்சாத்து இடுவதோடு குறிப்பிட்ட பிணைப்பணம் செலுத்துவதற்கு முடியாவிட்டால் அவரால் கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக செலுத்திய பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. பிணைப்பணம் கேள்வித் தொகையில் 5 வீதமாகும்.

7. வேலையை ஏற்றுக்கொண்ட கேள்விப்பத்திரக்காரர் கொந்தராந்து வேலை செய்து கொண்டிருக்கும் வேலையில் ஒரு பகுதிப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டிய தேவையிருந்தால் அப்படியான சந்தர்ப்பம் ஏற்படும் போது செய்த வேலையை மதிப்பீடு செய்து பெறுமதியை 100 க்கு 90 வீதமான தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

8. கேள்விப்பத்திரக்காரர்களுக்கு மேலதிக விளம்பரம் அவசியமானால் அம்பாறைக் கச்சேரியில் காணிப் பகுதியில் பெற்றுக்கொள்ள முடியும்.

எஸ். விஜயசிங்கம்,
அரசாங்க அதிபருக்காக,
அம்பாறை மாவட்டம்.

கச்சேரி, அம்பாறை,
23 ஆகஸ்ட், 1973.

9–3—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

---

## சிறு கைத்தொழிற்றிணைக்களம்

மொறட்டுவையிலுள்ள வடிவ அமைப்பு நிலையத்தில் உபயோகிப்பதற்கு வெட்டு மரம், மரக்கட்டைகள், சணல், களிமண், மணல் முதலிய பல்வேறு மூலப் பொருட்களை வழங்குவதற்கான கேள்விகளை உள்ளூர் வழங்குநர்களிடமிருந்து 1973.09.28 காலை 10 மணி வரை கொழும்பு 1, பிரிஸ்டல் வீதியிலமைந்திருக்கும் ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களத்தில் கேள்விச் சபைத் தலைவர் ஏற்றுக்கொள்வார்.

2. முழு விபரங்கட்கும் கேள்வி நிபந்தனைகட்கும் தயவு செய்து சிறு கைத்தொழிற் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கவும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் 3/1—(5/35)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.08.25.

9–62—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### மின்சக்தியால் இயங்கும் நீர்ப்பம்பி ஒன்று வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்

மின்சக்தியால் இயங்கும் நீர்ப்பம்பி ஒன்று வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்களை 1973.09.21 ந் திகதி முற்பகல் 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்வார்.

2. கேள்விக்காரர்கள் பின்வருவனவற்றை வழங்குவதற்காகக் குறிக்கலாம். (அ) முன்னைய இருப்பும் கிருலப்பனை மத்திய வேலைத்தளத்தில் விநியோகிக்கப்பட்டவை. கேள்விக்காரர்கள் முந்திய விநியோகக் காலத்தைக் குறிப்பிடலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25/- கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி, 1973.09.20 திகதி நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப் பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் " மின்சக்தியால் இயங்கும் நீர்ப்பம்பி ஒன்று வழ்ங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் " எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத் தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்ற முடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்பு நோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மீளப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

7. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழு விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக்கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது. தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1973.09.21 ந் திகதி முற்பகல் 11.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

11. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறியியலாளர் காணி அபிவிருத்தித் திணைக்ளம் கொழும்பிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1973.08.28.
CT/2/453

9–69—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

# பொருட்கள் விற்பனையும், பிறவும்

### ஏல விற்பனை

கீழ் குறிப்பிட்டுள்ள மிருகங்களை 1973 ம் வருடம் செப்டம்பர் மாதம் 27 ம் திகதி காலை 10.00 மணிக்கு குண்டகசாலையில் உள்ள திறந்த வெளி சிறைச்சாலையில் வைத்து ஏலத்தில் விற்கப்படும். இம்மிருகங்களை வேலை நாட்களில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 2.00 மணி வரையும், சனிக்கிழமையில் காலை 8.00 மணி தொடக்கம் காலை 10.00 மணிவரையும் பார்வையிடலாம்.

| | |
|---|---|
| (1) லாஜ் வயிற் ஆண் பன்றிக் குட்டிகள் | —10 |
| (2) லாஜ் வயிற் பெண் பன்றிக்குட்டிகள் | —10 |
| (3) லாஜ் வயிற் பெண் பன்றிகள் | —2 |

பி. டபிள்யு. பெரேரா,
சிறைச்சாலை அதிகாரி.

திறந்த வெளிச் சிறைச்சாலை,
பள்ளெகலே—குண்டசாலை,
1973.08.08.

9-68—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76.

---

### நீதவான் கோடு—புத்தளம்

கீழ் குறிக்கப்பட்டுள்ள அரசஉடமையாக்கப்பட்டதும், இதுவரை உரிமை கோரப்படாத பட்சத்தில் 1973.09.14 திகதி மு. ப. 9.30 மணிக்கு இந்நீதிமன்றவளாகத்தில் குருணகல் பிரதேச நீதிமன்ற பரிபாலன செயலாளரான திரு. யக்கந்தாவல அவர்களின் முன் நிலையில், பகிரங்க ஏலவிற்பனையில் விற்கப்படும்.

1973.09.14 திகதி மு. ப. 8.00 மணி முதல் மு. ப. 9.00 மணி வரை இப்பொருட்களை இந்நீதிமன்ற வளாகத்தில் பார்வையிடலாம்.

ஏல விற்பனையில் வெற்றி பெறுவோர் உடனடியாகப் பணம் செலுத்தி உரிய பொருட்களை இங்கிருந்து அகற்ற வேண்டும்.

ஆர். பரமகுரு,
நீதவான்.

புத்தளம்,
1973, ஆகஸ்ட் 2 ந் திகதி.

**துவிசக்கர வண்டிகள்**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு இல. | ஏஆர் 200/71 | ... | 1 ப்ரேம் இல. ஏஜே 9340 |
| ,, ,, | ஏஆர் 87/72 | ... | 1 ,, ,, 269801 |
| ,, ,, | ஏஆர் 242/72 | ... | 1 'றலே' ,, இஜி 270 |
| ,, ,, | எம்சிபி. 11532 | ... | 1 'றலே' ,, இஏ 2109 |
| ,, ,, | எம்சிபி. 15593 | ... | 2 மேல்விழக்குகள் (ஹெட்லைட்) |

89-6

| | | | |
|---|---|---|---|
| வழக்கு இல. | 16570 (எம்சிபி) | ... | 1 பெட்ரோமெக்ஸ் |
| ,, ,, | எம்சிபி. 17240 | ... | 1 கோடரி |
| ,, ,, | எம்சிபி. 14431 | ... | 1 கத்தி |
| ,, ,, | எம்சிபி. 15082 | ... | 1 மண்ணு கத்திரி |
| ,, ,, | எம்சிபி. 4244 | ... | 1 ஹரிகேன் விளக்கு/1 டோச் விளக்கு (5 பற்றரி) |
| ,, ,, | இலக்கமிடப்படாதது | ... | 1 மண்ணு |
| ,, ,, | எம்சிபி. 18600 | ... | 1 அரிவாள்/1 கோடரி |
| ,, ,, | ஏஆர் 177/72 | ... | 1 லொறி டயர் (றிம்முடன்) |
| ,, ,, | ஏஆர் 189/72 | ... | 1 விளையாட்டுமேசை |

| | |
|---|---|
| பிளாஸ்டிக்/ஜாடிகள் ... ... | ... 60 |
| அலுமினியப் பாத்திரங்கள் ... | ... 50 |
| அஸிட் ஜாடிகள் ... ... | ... 2 |
| பிளாஸ்டிக்கிண்ணங்கள் ... | ... 80 |
| டிஸ்பென்சரி போத்தல்கள் ... | ... 25 |
| வெற்றுபோத்தல்கள் ... | ... 250 |
| வெற்று பீப்பாக்கள் ... | ஒரு தொகை |
| சிறு அலுமாரி ... ... | ... 1 |

9-32—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76.

---

### கண்டெடுக்கப்பட்ட உரிமை கோராது விடப்பட்ட பொருட்கள் விற்பனை

கண்டெடுக்கப்பட்டனவும் கோராது விடப்பட்டனவுமாகிய பொருட்களின் ஏலவிற்பனை மருதானை இழந்த சொத்து சேமக்காரியாலயத்தில் (போக்குவரத்து அதிகாரி அலுவலகத்தின் அடித்தளத்தில்) 1973 ம் ஆண்டு செப்டம்பர் மாசம் 28 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும். நண்பகல் உணவு வேளை 12.00 மணிமுதல் 1.00 மணிவரை நிறுத்தி வைக்கப்படும்.

ஏலவிற்பனை நாள் காலை 8.15 மணிதொடக்கம் 9.45 மணிவரை ஏலம் நிகழுமிடத்தில் பொருட்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

வி. ரி. நவரட்ன,
பதில் பொது முகாமையாளர்,
இலங்கைப் புகையிரதப்பகுதி.

த. பெ. இல. 355,
கொழும்பு,
4.8.73.

9-22—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76.

---

### பாவிக்க முடியாத மோட்டார் வாகனங்கள் பிரசித்த ஏலவிற்பனை

கீழே காட்டப்பட்ட பாவிக்க முடியாத மோட்டார் வாகனங்கள் 1973 ம் ஆண்டு 09 மாதம் 28 ம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு கடவத்தையிலுள்ள மக்கோல சான்று பெற்ற பாடசாலையில் பிரசித்த ஏல விற்பனையில் விற்கப்படுமென்று பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(1) 2 ஸ்ரீ 6362 வொக்ஸ்வகன் "கோம்பி"

(2) 4 ஸ்ரீ 1988 ஸ்ரான்டட் 10

கேள்வி முடிவில் முழுத்தொகையில் 50% வீதம் கட்டப்படல் வேண்டும். மிகுதிப்பணம் வாகனங்கள் அகற்றப்படுமுன் 7 நாட்களுக்குள் கட்டப்படல் வேண்டும்.

3. விற்பனை முடிந்த 7 நாட்களுக்குள் மிகுதிப்பணம் கட்டி வாகனங்கள் அகற்றப்படாவிடில் முற்பணக் கட்டுத்தொகை இழந்தவர்களாகக் கருதப்படுவர்.

4. குறிக்கப்பட்ட பாடசாலையில் வேலை செய்யும் நாட்களில் காலை 9 மணி தொடக்கம், 3 மணிவரையும், சனிக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் 11.30 மணிவரையும், வாகனங்களைப் பார்வையிடலாம்.

என். கே. ஏ. த சில்வா,
நன்னடத்தைப் பாதுகாவல், சிறுவர் கவனிப்புச் சேவை ஆணையாளர்.

103, 1/11, டி மெல் கட்டிடம்,
சதாம் வீதி,
கொழும்பு 1.

8-26—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76.

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**01.12.1968 தொடக்கி அமுலுக்கு வந்தது**

# "இலங்கைக் குடியரசு வர்த்தமானி (கெசற்)"

**வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பானராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. சனிக்கிழமைகளில் மு. ப. 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. சனிக்கிழமைகளில் மு. ப. 11 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறொக்றால்" கைகொயப்பமிடப்பட்டு அல்லது கையொயப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 | 0 | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக்கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | ரூ. | ச. | சதம் |
| (அ) (i) வர்த்தமானியின் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 | 50 | 20 |
| (ii) வர்த்தமானியின் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 | 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியின் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 30 | 15 |
| (ii) வர்த்தமானியின் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 60 | 15 |

இவைகளில் ஏதாவதேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும் சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஒகத்து | 3.8.73 | வெள்ளி | 27.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 3.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 10.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 17.8.73 | தபுன் | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 24.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 29.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 5.9.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 11.9.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 19.9.73 | புதன் | ந.ப. 12.00 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆல் ஒகத்து மீ 18 ந வ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.